


**21. 07. 2025**

## தலைப்பு செய்திகள்

**1. நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில்** மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக நடைபெறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**2. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய** நிலையில் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**3. அஹமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து குறித்த** உண்மை நிலவரம் முழுமையான விசாரணைக்கு பின்னரே தெரியவரும் என்று மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

4. **அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட** விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை தமிழக அரசு நிறுத்திவைத்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

**5. நீலகிரி, கோவை, தென்காசி, தேனி, திருவள்ளூர்,** காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

### நாடாளுமன்றம் - பிரதமர்

**நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில்** மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக நடைபெறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு முன்னர் இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், ஒட்டுமொத்த சாதனைகளின் கொண்டாட்டத்தால் மழைக்கால கூட்டத்தொடர் பெருமித அடையாளமாக திகழ்வதாக எடுத்துரைத்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிரதமர், கட்சி நலன்களை ஒதுக்கிவிட்டு தேச நலன்களை முன்னிறுத்த வேண்டுமென்றும் கோரினார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய ராணுவ தாக்குதல் 100 சதவிகிதம் நடைமுறைப்படுத்தப்பட்டதாக கூறிய பிரதமர், 22 நிமிடங்களிலேயே பயங்கரவாதத்திற்கு துணை நின்றோரின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழான ராணுவ சக்தியால் சர்வதே நாடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக கூறியஅவர், இந்த வெற்றி கொண்டாட்ட அமர்வில் அனைத்து குரல்களும் ஒரே மாதிரி ஒலித்தால் நம் ராணுவத்தினரின் வலிமைக்கு அது மேலும் உத்வேகம் அளிப்பதாக அமையும் என்றார்.

இதன்மூலம் குடிமக்கள் ஊக்கம் பெறுவதோடு, ராணுவ ஆராய்ச்சி, படைப்பாற்றல் திறன், உற்பத்தி ஆகியவை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலால் உலகம் அதிர்ச்சி அடைந்ததாக கூறியஅவர், தீவிரவாதம் மற்றும் அதன் மையப்புள்ளி குறித்து உலக நாடுகள் தங்களது கவனத்தை திருப்பியதாக சுட்டிக்காட்டினார்.

மாவோயிஸம் மற்றும் நக்சல் தீவிரவாதத்தை வேரோடு களைய மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறியஅவர், இப்பாதையில் இந்திய பாதுகாப்பு படையினர் துரிதமாக முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

நக்சல் தீவிரவாதத்தில் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மாவட்டங்கள் தற்போது அதிலிருந்து வெளிவந்திருப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

இப்பகுதிகள் அனைத்தும் வளர்ச்சியின் மண்டலங்களாக உருவாகி வருவது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

பாதுகாப்புத்துறையில் ஆராய்ச்சி, வளர்ச்சியை எடுத்துரைத்த அவர், இதன்மூலம் இளையோருக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும் என குறிப்பிட்டார்.

2014-ம் ஆண்டு பத்தாவது பொருளாதார நாடாக இருந்த இந்தியா தற்போது 3-வது பெரிய பொருளாதார நாடாக உருவாவதற்கான பாதையில் வேகமாக முன்னேறி செல்வதாகவும் பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்

❖❖❖❖❖❖❖

**அவை ஒத்திவைப்பு**

**நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று** தொடங்கிய நிலையில் பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணி வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் காங்கிரஸ், சமாஜ்வாடி, திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மைய பகுதியில் குழுமி ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி முழக்கமிட்டன.

உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டுகோள் விடுத்த அவை நடத்தும் அலுவலர் அவர்களை இருக்கைகளுக்கு செல்ல கேட்டுக்கொண்டார்.

இதனிடையே நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜுஜு பேசுகையில், பிற்பகல் இரண்டரை மணிக்கு அவை அலுவல் குழு கூட்டம் நடைபெற இருப்பதாகவும், அதில் விவாதம் தொடர்பான அட்டவணை குறித்து இன்று முடிவு செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

விவாதத்திற்கு அரசு தயாராக உள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதியில் குழுமி முழக்கமிடுவது சரியல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவை துணைத்தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான திரு.ராஜ்நாத் சிங் அரசு அனைத்து விவாதத்திற்கும் தயாராகவே உள்ளதாக எடுத்துரைத்தார்.

ஆனால் இவற்றிற்கு செவிமடுக்காத எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக அவையில் குமரிஅனந்தன் உட்பட 8 முன்னாள் உறுப்பினர்களின் மறைவிற்கு மக்களவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் அஹமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்தில் உயிரிழந்தோரின் நினைவாகவும் அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சர்வதேச விண்வெளி மையத்திற்கு வெற்றிகரமாக சென்று திரும்பிய விண்வெளி வீரர் குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லாவிற்கு மக்களவை தலைவர் உட்பட உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

சுபான்ஷு ஷுக்லாவின் சாதனை குறித்து விரிவான விவாதம் அவையில் இடம்பெறும் என்று திரு. ஓம்பிர்லா அறிவித்தார்.

**மாநிலங்களவையிலும் ஆபரேஷன் சிந்தூர்** தொடர்பான விவாதம் உள்ளிட்ட பிரச்சனைகள் எதிரொலித்ததால் அவை முதலில் நண்பகல் 12 வரையிலும், பின்னர் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக மாநிலங்களவையில் முன்னாள் உறுப்பினர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அவைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் 3 நியமன உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖

**ராகுல்காந்தி**

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல்காந்தி, எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் பேச மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**ராம்மோகன் நாயுடு**

**அஹமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து** தொடர்பான விசாரணை வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்று வருவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், சர்வதேச தரத்திற்கு ஈடாக விபத்து தொடர்பான விசாரணை நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், சர்வதேச வல்லுநர்களும் இதில் இடம்பெற்றிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

விமான விபத்து தொடர்பான பூர்வாங்க விசாரணை நிறைவடைந்திருப்பதாகவும், முதல்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

இந்திய ஊடகங்கள் மட்டுமல்லாமல் மேற்கு நாடுகளின் ஊடகங்களும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு உண்மையின் பக்கமே நிற்பதாகவும், முழுமையான விசாரணைக்கு பின்னரே உண்மை நிலவரம் தெரியவரும் என்றும் திரு.ராம்மோகன் நாயுடு குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**எடப்பாடி**

**அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட** விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை திமுக அரசு நிறுத்திவைத்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திருவாரூரில் இன்று விவசாயிகளிடம் கலந்துரையாடிய அவர், நெல் கொள்முதல் செய்தபோது விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் வரவு வைக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

டிராக்டர் உள்ளிட்ட வேளாண் கருவிகள் இணையதள முறையில் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட நிலையில் இந்த திட்டத்தில் தற்போது பாரபட்சம் காட்டப்படுவதாக குறைகூறினார்.

காவிரி பிரச்சனைக்கு தீர்வுகாண திமுக அரசு உரிய அழுத்தம் தரவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

ஆந்திரா, தெலங்கானா முதலமைச்சர்களுடன் பேசி கோதாவரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**ராஜேந்திரன்**

**தமிழ்நாட்டில் கால்நடைகளை பாதுகாக்கும்** வகையில் 16 இடங்களில் பல்நோக்கு மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு உபகரணங்களை இன்று வழங்கி பேசியஅவர், தீவன பயிர்களின் உற்பத்தியை பெருக்கும் வகையில் நடப்பாண்டு 300 ஏக்கரில் 15 லட்சரூபாய் மதிப்பீட்டில் தீவன பயிர்கள் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர்** ஆலய வளாகத்தில் நாளைமறுநாள் நடைபெறும் மாமன்னன் ராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடிதிருவாதிரை நிகழ்ச்சியை ஒட்டி கிராமிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளை இன்று நேரில் ஆய்வுசெய்த அமைச்சர், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றித்தர அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

**பள்ளி மாணாக்கர் புத்தக வாசிப்பை மேற்கொள்ள** வேண்டியது அவசியம் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சை மாவட்டம் இலுப்பக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் நூலகத்தை இன்று திறந்துவைத்து பேசியஅவர், வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம், தவறான பாதையில் பயணிப்பது தடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

**மதிவேந்தன்**

**கிராமப்புற பகுதிகளில் தாட்கோ சார்பில் அமைக்கப்பட்டு வரும்** அறிவுசார் மையங்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் இடையப்பட்டி புதிய கிராம அறிவுசார் மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், சமுதாய கூடங்களுடன் இணைந்து அறிவுசார் மையங்கள் நன்கு பராமரிக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**கால்நடை கலந்தாய்வு**

**தமிழ்நாட்டில் நடப்பாண்டு கால்நடை மருத்துவ படிப்புகளுக்கான** கலந்தாய்வு இன்று தொடங்கியது.

மொத்தம் 660 இடங்களுக்கு இணையதளம் வாயிலாக வரும் 24-ம் தேதிவரை இந்த கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் ராணுவ வீரர்களின் வாரிசுதாரர்களுக்கான சிறப்பு பிரிவு கலந்தாய்வு நாளையும்,

அரசு பள்ளி மாணாக்கருக்கான 7.5 சதவிகித உள்ஒதுக்கீட்டு கலந்தாய்வு நாளைமறுநாளும் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**தேனி மாவட்டத்தில் சுருளி சின்ன சுருளி** அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு 3-வது நாளாக குளிக்க இன்றும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டுறவு நகர வங்கியில்** மூத்த குடிமக்களுக்கான மாபெரும் சிறப்பு வைப்புநிதி முகாம் **இன்று** தொடங்கி வரும் 25-ம் தேதிவரை நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

**மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு** நண்பகல் நிலவரப்படி **22** ஆயிரத்து 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. அணையிலிருந்து உபரிநீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் 120 அடியாகும்.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி,** கோவை, தென்காசி, தேனி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

வடதமிழக கடலோரம், தென் தமிழகம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், தென்மேற்கு, தென்கிழக்கு வங்க கடல், அரபிக்கடல் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இப்பகுதிகளுக்கு அடுத்த 5 நாட்களுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**Chelmsford-இல் இந்தியாவிற்கு எதிரான** - இளையோர் 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு 229 ரன் எடுத்திருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஸ்பெயினில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர்** டென்னிஸ் போட்டியின் ஆடவர் முதல்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஆரியான்ஷா - குரோஷியாவின் டுஜேவை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖